




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கோட்டார் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் காயகல்ப் விருது வழங்குவது தொடர்பான பயிற்சியை இன்று (19.12.2016) துவக்கி வைத்தார்.

செ.வெ.எண்: 888/2016 நாள்: 19.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,**
**கோட்டார் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில்**
**காயகல்ப் விருது வழங்குவது தொடர்பான பயிற்சியை**
**இன்று (19.12.2016) துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கோட்டார் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் காயகல்ப் விருது வழங்குவது தொடர்பான பயிற்சியை இன்று (19.12.2016) துவக்கி வைத்தார்.

மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் சிகிச்சைத்தரம், சுற்றுப்புறச்சூழல் சுகாதாரம் மேம்படுத்துதல் மற்றும் தொற்றுநோய் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துவதற்காக மத்திய அரசால் காயகல்ப் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு விருது வழங்கப்பட்டுவருகிறது. அதற்கான பயிற்சி கன்னியாகுமரி மாவட்ட அளவில், கோட்டார் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் 19.12.2016 அன்று நடைபெற்றது.

காயகல்ப் விருது கீழ்க்காணும் செயல்திறனின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

மருத்துவமனை பராமரிப்பு, துப்புரவு மற்றும் சுகாதாரம், கழிவு மேலாண்மை, தொற்றுநோய் கட்டுப்பாடு, ஆதரவு சேவைகள், சுகாதார மேம்பாடு போன்ற விருதுக்காக தேர்வு செய்யப்படும் மருத்துவமனைகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்படுகிறது. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் பரிசாக ரூ. 50 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ. 20 இலட்சமும், ஆறுதல் பரிசாக ரூ. மூன்று இலட்சமும் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் நமது மாவட்டத்தை சார்ந்த அனைத்து மருத்துவ அலுவலர்களும், செவிலியர்களும் நமது மாவட்டத்திற்கு இவ்விருது கிடைத்திட அயராது பாடுபட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பயிற்சியில் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.யு.வசந்தி, மாவட்ட துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.மதுசூதனன், தேசிய சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர் மரு.ரியாஸ் அஹமத், மரு.மாதவன் மற்றும் மாவட்ட மருத்துவமனை மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.